IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 67/2021

| | |
|---|---|
| Deposition of Witness | : PW1 |
| Name | : பாலு (வயது –57 ) |
| Father's Name /W/o | : த/பெ துரைகண்ணு |
| Religion | : இந்து |
| Calling | : – |
| Address | : மூதூர் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 05.02.2026.

## குறுக்கு விசாரணை

1. என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் என்னை பயிர் செய்ய விடாமல் தடுக்கிறார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 364/5. அதன் விஸ்தீரணம் என்னவென்றால் 15 செண்ட். தாவா சொத்து எனக்கு எவ்வாறு வந்தது என்றால் என் தந்தை எனக்கு கிரையம் எழுதி கொடுத்தார். எந்த தேதியில் எழுதி கொடுத்தார் என்றால் 06.06.2006. என் தந்தை என் பெயருக்கு கிரையம் எழுதி கொடுத்தாரா அல்லது செட்டில்மெண்ட் எழுதி வைத்தாரா என்றால் கிரையம் எழுதி கொடுத்தார்.

2. என் பிரமாண வாக்குமூலத்தில் மற்றும் தாவாவில் என் தந்தை என் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் அது தவறு. என் தந்தை எனக்கு எவ்வளவு செண்ட் எழுதி வைத்தார் என்றால் தாவா சர்வே எண்ணில் 15 செண்ட் எழுதி வைத்தார். என் தந்தைக்கு தாவா சொத்து எவ்வாறு வந்தது என்றால் யு.டி.ஆர். பதிவேடு மூலம் கிடைத்தது. என்

தாத்தா பெயர் என்னவென்றால் மாணிக்கரெட்டி.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என் தந்தை 02.08.1976 தேதியில் 3 செண்ட் கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு எழுத்து சரியாக தெரியவில்லை. என் தந்தை 02.08.1976 தேதியில் தாவா சர்வே எண்ணில் 3 செண்ட் கிரையம் வாங்கியதை தெரிந்தும் அதனை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த போது 1 முதல் 4 பிரதிவாதிகள் மீதுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பதில் மனு தாக்கல் செய்தார்களா என்றால் சரிதான்.

4. மேற்படி பதில் மனுவில் எங்களுக்கும் இந்த சொத்துக்கும் எந்த சம்பந்தமில்லை என்றும் 5 முதல் 9 பிரதிவாதிகள் தான் தாவா சொத்து சர்வே எண்ணிற்கு உரிமையானவர்கள் என்று தெரிவித்துள்ளார்களா என்றால் ஆம். 5 முதல் 9 பிரதிவாதிகள் வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டு அவர்கள் பதில் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். என் தந்தைக்கு தாவா சர்வே எண்ணில் 3 செண்ட் தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

5. மேற்படி 3 செண்ட் தவிர்த்து மீதமுள்ள 12 செண்ட்டிற்கு என் தந்தைக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 12 செண்ட் குறித்து என் தந்தை எனக்கு எழுதி வைத்த கிரையப் பத்திரம் செல்லாது என்று 5 முதல் 9 பிரதிவாதிகள் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கிரையப் பத்திரம் 5 முதல் 9 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**